# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 17 | செவ்வாய்க்கிழமை 01.04.2025 | கதிர் 168



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் இடம்பெறாது!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவிப்பு



கொழும்பு, ஏப். 02

மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம் நடைபெறாது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"அரசு தொடர்ந்து தேர்தல்களை நடத்திக்கொண்டிருக்க முடியாது. அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் பிரதான தேர்தல்கள் முடிவுக்கு வரும்.

மாகாண சபைத் தேர்தலை மாத்திரம் நடத்த வேண்டும். சட்டங்களை மாற்ற வேண்டியுள்ளதாலும், நாட்டின் அபிவிருத்திக்குப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாலும் மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்த முடியாது." - என்றார்.

## புதுமுக மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பில் சிரேஷ்ட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை!



கொழும்பு,ஏப்.01

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடப் புதுமுக மாணவன் ஒருவர் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு இரண்டாம் வருட சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாகச் செயற்படும் வகையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள் ளதுடன், சம்பவம் தொடர்பில் நிறுவனமயப் படுத தப்பட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விஞ்ஞான

7➤

## பல்கலைக்கழக மாணவன் பகிடிவதை மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு

யாழ்ப்பாணம் ,ஏப்.01

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானப் பீட புதுமுக மாணவன் மீதான பகிடிவதை விவகாரம் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான பிராந்திய இணைப்பாளர் த.கனக ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7➤

## வெலிக்கடைப் படுகொலையையும் விசாரணைக்கு எடுக்க வேண்டும்!



### அநுர அரசிடம் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை

வவுனியா, ஏப். 01

"அநுர அரசு நியாயமாகச் செயற்படுமாக இருந்தால் பட்டலந்த போன்று வெலிக்கடை படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக்

7➤

## வவுனியாவில் குளத்தில் இருந்து உருக்குலைந்த நிலையில் சடலம்



வவுனியா, ஏப். 01

வவுனியா, இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குளத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த

7➤

## நீர்த்தேக்கத்தில் இருந்து யுவதியின் சடலம் மீட்பு!



தலவாக்கலை, ஏப். 01

தலவாக்கலை, மேல் கொத்மலை நீர்த்தேக் கத்தில் இருந்து யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

டயகம, போட்மோர் பகுதியை சேர்ந்த 22

7➤

### இரவு நேர களியாட்ட விடுதி மோதல்:

## யோஷிதவுடன் சென்ற நால்வருக்குப் பிணை!

கொழும்பு, ஏப். 01

கொழும்பு, யூனியன்பிளேசில் உள்ள இரவு நேர களியாட்ட விடுதிக்கு வெளியே கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி ஏற்பட்ட மோதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களையும் பிணையில் விடுதலை செய்ய கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

மாலைக்கதிர்
Maalaikkathir



## அதிகரிக்கப்படவுள்ள பேருந்து கட்டணம்!

ஜூலை மாதத்தில் இருந்து பேருந்து கட்டணம் கணிசமாக அதிகரிக்கும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று (01) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

பேருந்துகள் ஏற்கனவே மூன்று ரூபாய் நஷ்டத்தில் இயக்கப்படுகின்றன.

அரசாங்கம் விதித்துள்ள புதிய வரி விகிதங்களின் கீழ் பேருந்துகளின் விலைகளும் அதிகரித்துள்ளது.

அத்துடன் பேருந்துகளில் வற் வரியும் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் பேருந்து கட்டண உயர்வு தவிர்க்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமக்கு இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே உள்ளன. விரைவில் வருடாந்திர பேருந்து கட்டணம் திருத்தப்படவுள்ளது. எனவே, ஜூலை மாதத்தில் பேருந்து கட்டணம் நிச்சயம் கணிசமாக அதிகரிக்கும்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு போக்குவரத்து அமைச்சருடன் இதைப் பற்றி கலந்துரையாடியிருந்தோம். இப்போது இந்த ஆபத்தை நாங்கள் கடந்துவிட்டோம். நாங்கள் அவருக்கு நேரடியாகத் தெரிவித்திருக்கின்றோம்.

இதன்படி, ஜூலை மாதத்திற்குள் இந்தப் பேருந்து கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக்கும்.

ஏனென்றால் பேருந்துகளுக்கு வற் வரி சேர்க்கப்பட்டுள்ளது. பேருந்தின் விலை அதிகரித்துள்ளது. ஏனைய அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளன என்று நாங்கள் நீண்ட காலமாக கூறி வருகிறோம் என அவர் தெரிவித்திருந்தார்.

## பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவைக்கு ஏற்படவுள்ள பாதிப்பு– பாடசாலை வாகன சேவை வழங்குனர் சங்கம் எச்சரிக்கை!

பாடசாலை வாகன சேவை வழங்குனர் சங்கம் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதாவது, டீசல் நிவாரணம் வழங்காவிட்டால், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவையிலிருந்து விலக வேண்டியிருக்கும் என பாடசாலை வாகன சேவை வழங்குனர் சங்கத்தின் தலைவர் ருவான் பிரசாத் தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டுத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.ஓ.சியும் விலைகளை குறைத்தது




கொழும்பு,ஏப்.01

லங்கா இந்தியன் ஒயில் கம்பெனி (டுஐழுஊ), பெட்ரோல் விலையை ‘சைபெட்கோ’வின் விலைக்கு சமப்படுத்தியுள்ளதாகக் கூறுகிறது.

அதன்படி, 92 ஆக்டேன் பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலை ரூ.10 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 309 ரூபாயாக இருந்த ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றரின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 299 ரூபாயாகும்.

95 ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலை 10 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 361 ரூபாயாகும். (ஐ)

## போலி கிரீஸ் விசாக்களுடன் மூவர் கைது

கொழும்பு,ஏப்.01

போலி கிரேக்க வதிவிட விசாக்களுடன் கிரீஸ்க்கு செல்ல முயன்றதற்காக மூன்று பங்களாதேஷ் பிரஜைகள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) கைது செய்யப்பட்டனர்.

மார்ச் 30 ஆம் திகதி மாலை 5:25 மணிக்கு புறப்படவிருந்த கல்ஃப் ஏர் விமானம் புகு-145 இல் பஹ்ரைனுக்கு ஏற முயன்றபோது 22, 23 மற்றும் 25 வயதுடைய பெண்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கிரீஸ் குடியுரிமை விசாக்கள் குறித்து அதிகாரிகள் சந்தேகம் அடைந்து, மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவுத் திணைக்கள எல்லை கண்காணிப்புப் பிரிவிடம் ஒப்படைத்தனர்.

தொழில்நுட்ப பரிசோதனையில் கிரீஸ் விசாக்கள் உயர் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி போலியாக தயாரிக்கப்பட்டது தெரியவந்தது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் டீஐயு குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)



# விஜயதாசவின் கருத்துகளை மறுத்தார் நீதியமைச்சர்

கொழும்பு,ஏப்.01

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் (ஐ.ஜி.பி) தேசபந்து தென்னகோனுக்கு எதிராக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை (NCM) அரசியலமைப்புக்கு முரணானது என்ற முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வின் கூற்றை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நிராகரித்துள்ளார்.



தொலைக்காட்சி நேர்காணலின் போது பேசிய அமைச்சர் நாணயக்கார, முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பல முக்கிய உண்மைகளை தவறாகப் புரிந்துகொண்டதாகக் கூறினார். தேசபந்து தென்னகோன் ஐஜிபியாக தனது கடமைகளைச் செய்வதைத் தடுக்கும் உத்தரவுகளை மட்டுமே உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது என்று விளக்கினார்.

“தென்னகோனின் நியமனம் சட்டவிரோதமானது என்ற அடிப்படையிலேயே உயர் நீதிமன்றத்தில் உள்ள அடிப்படை உரிமைகள் மனு சவால் செய்கிறது. உயர் நீதிமன்றம் அவர் ஐஜிபி இல்லை என்று எந்த வகையிலும் கூறவில்லை. அந்த பதவியில் தனது கடமைகளைச் செய்வதை மட்டுமே அது தடுத்துள்ளது. அவர் ஐஜிபியாகக் கருதப்படுவதால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சட்டவிரோத நியமனத்தின் அடிப்படையில் மட்டுமே உள்ளது. தென்னகோன் ஐஜிபி இல்லை என்ற விஜயதாசவின் கூற்றுகளை இது தோற்கடிக்கிறது,” என்று அவர் கூறினார்.

மறுபுறம், தேசபந்து தென்னகோனின் தவறான நடத்தைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் மேலும் விளக்கினார்.

“தென்னகோனின் சட்டவிரோத நியமனம் குறித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை அவரது நடத்தைக்கு எதிரானது. எனவே, இது நீதிமன்ற விசாரணையாக கருதப்படவில்லை. இந்த முழு வழக்கும் வேறுபட்டது. இது விஜயதாசவின் கூற்று தவறு என்பதை மீண்டும் நிரூபிக்கிறது. எனவே, அரசாங்கமாக, நாங்கள் செய்தது சரியானது,” என்று அவர் கூறினார்.

சட்ட ஆலோசனையின் அடிப்படையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்னோக்கி எடுத்துச் செல்லப்படுவதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை உயர் நீதிமன்றம் தேசபந்து தென்னகோன் ஐஜிபி பதவியை வகிக்கவில்லை என்று தீர்ப்பளித்துள்ள நேரத்தில், நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விஜயதாச ராஜபக்ஷ அண்மையில் ஒரு ஊடக சந்திப்பின் போது கூறியதைத் தொடர்ந்து அவரது கருத்துக்கள் வந்தன.

“ஐஜிபி பதவியை வகிக்கும் ஒருவருக்கு எதிராக மட்டுமே நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தாக்கல் செய்ய முடியும். தேசபந்து தென்னகோன் ஐஜிபி அல்ல என்று உயர் நீதிமன்றம் ஏற்கனவே ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. எனவே, சபாநாயகர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்றுக்கொள்வது அரசியலமைப்பிற்கு விரோதமானது,” என்று அவர் கூறினார்.

தேசபந்து தென்னகோனுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் குழுவில் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று விஜயதாச ராஜபக்ஷ மேலும் கூறினார்.

“தேசபந்து தென்னகோன் ஐஜிபி அல்ல என்று உயர் நீதிமன்றமே தீர்மானித்துள்ள நிலையில், மறுபுறம், அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்க விசாரணை நடத்தப்படும். இது எந்த சட்ட ஆதரவும் இல்லாத ஒரு செயல்,” என்று அவர் கூறினார், இந்த நடவடிக்கை பாராளுமன்றத்தையும் நீதித்துறையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

இடைநீக்கம் செய்யப்பட்ட ஐ.ஜி.பி தேசபந்து தென்னகோனை நீக்குவதற்கான விசாரணைக் குழுவை நியமிப்பதற்கான தீர்மானம் 2025 மார்ச் 25 அன்று பாராளுமன்ற சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில் 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர். (ஐ)

# யானைகளால் பாதிக்கும் பிள்ளைகளுக்கு நிதியுதவி



கொழும்பு,ஏப்.01

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவது அன்றாட நிகழ்வாக மாறியிருப்பதால் பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஊக்குவிப்பாக நிதியுதவியை வழங்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் கூடிய ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாகச் சபை தீர்மானித்துள்ளது.

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதால் பாதிக்கப்பட்ட, காயங்களுக்கு உள்ளாகியவர்கள் இருக்கின்ற குடும்பங்களுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படுவதோடு, காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதால் சொத்துச் சேதங்களை எதிர்கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளும் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

பிரதேச செயலாளரின் மேற்பார்வைக்கு அமைய நிதியுதவிக்கு தகுதியுடைய குடும்பமாக இருக்க வேண்டும் என்பதுடன், 1 ஆம் வகுப்பு தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் அல்லது க.பொ.த உயர்தரம் வரையில் கல்வி பயிலும் பிள்ளைகள் இருக்கின்ற குடும்பமாக இருப்பதும் இந்த நிதியுதவிக்கான தகுதியாக கருதப்படும்.

2025-01-01 திகதி அல்லது அதற்கு பின்னரான தினங்களில் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைந்த காரணத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பமாக இருக்க வேண்டும் என்பதோடு, தற்போதும் ஜனாதிபதி நிதியத்தினால் செயற்படுத்தப்படும் க.பொ.த உயர்தர புலமைபரிசு வேலைத்திட்டத்தின் பயனாளியாக இல்லாதிருப்பதும் தகுதியாக கருத்தப்படும்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக 1 ஆம் வகுப்பு முதல் 11 வரையில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட பிள்ளையொன்றுக்காக 3,000 அடிப்படையில் அதிகபட்சமாக 12 மாத காலத்திலற்கும், 12 மற்றும் 13 வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 5,000 அடிப்படையில் அதிகபட்சமாக 12 மாத காலத்திற்கும் 2025 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நிதியுதவி வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி தமது பிரதேச செயலாளர் பிரிவுகளில் தகுதியை பூர்த்தி செய்த குடும்ப பிள்ளைகளின் தகவல்களை பெற்றுக்கொண்டு தமது தனிப்பட்ட மேற்பார்வை மற்றும் பரிந்துரையுடன் குறித்த விண்ணப்பங்களை தாமதமின்றி ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மியன்மருக்கு செல்லும் இலங்கை மருத்துவக் குழு



கொழும்பு,ஏப்.01

மியன்மாரில்நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக இலங்கை மருத்துவக்குழு ஒன்றை மியன்மருக்கு அனுப்பத்தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மியன்மார் அரசாங்கம் தேவையான அனுமதியை வழங்கியவுடன், அனர்த்த மீட்புப் பணிகளில் அனுபவமுள்ள விசேட மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளடங்கிய மருத்துவ நிபுணர்கள் குழு ஒன்று தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மியன்மாருக்கு அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தேவையான பொருட்களை வழங்க அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

மேலதிகமாக களத்தில் உதவி வழங்க விசேட மருத்துவக் குழு ஒன்றை நாங்கள் நியமித்துள்ளோம் எனவும் சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ஐ)

# வியாழேந்திரனின் விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு,ஏப்.01

இலஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரனின் விளக்கமறியலை எதிர்வரும் 08ஆம் திகதி வரை நீடித்து, கொழும்பு நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் மார்ச் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஏப்ரல் 1 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மணல் அகழ்வு உரிமம் வழங்குவதற்காக 1.5 மில்லியன் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# என்.எல்.சி.,யில் முற்றுகை 135 விவசாயிகள் கைது

கர்நாடகா அரசை கண்டித்து விவசாயிகள் சங்க கூட்டமைப்பினர் நேற்று என்.எல்.சி., அனல்மின் நிலையத்தை முற்றுகையிட முயன்றனர். மாநில தலைவர் வேலுசாமி தலைமையில், மாநில பொது செயலாளர் பழனி முருகன், பொருளாளர் ராஜேஷ் உட்பட 9 விவசாய அமைப்புகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். நெய்வேலி அனல் மின் நிலையம் முற்றுகை: விவசாயிகள் 400 பேர் கைது போராட்டத்தில் பங்கேற்ற நிர்வாகிகள், மேகதாதுவில் காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடகா அரசு அணை கட்டுவது என்பது காவிரி டெல்டா விவசாயிகளின் உரிமையை பறிக்கும் முயற்சியாகும். எனவே, தமிழகத்தை வஞ்சிக்கும் கர்நாடக மாநிலத்திற்கு நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் என்.எல்.சி., மின்சாரத்தை வழங்கக் கூடாது. தமிழக அரசு, விவசாயிகளுக்கு ஆதரவாக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில் வரும் சட்டசபை தேர்தலில் தி.மு.க.,விற்கு எதிராக செயல்படுவோம்' என கூறினர். மதியம் பகல் 1:00 மணிக்கு போலீசாரின் தடையை மீறி என்.எல்.சி., இரண்டாம் அனல்மின் நிலையத்தை நோக்கி சென்ற விவசாயிகள் சங்கத்தினர் 135 பேரை டி.எஸ்.பி., ராதாகிருஷ்ணன் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் சுதாகர், செந்தில்குமார் உள்ளிட்ட போலீசார் கைது செய்தனர்.

நெய்வேலி இரண்டாம் அனல் மின் நிலையத்தில் முற்றுகை போராட்டம் நடத்த முயன்ற விவசாயிகள் சங்க கூட்டமைப்பினரை பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

## ஹிந்து கடவுள் குறித்து அவதூறு: கேரள கம்யூ., எழுத்தாளரால் சர்ச்சை

கன்னியாகுமரி மாவட்டம் அருமனை அருகே ஹிந்து கடவுளை மா.கம்யூ., ஆதரவு எழுத்தாளர் சீயான்குமார் அவதூறாக பேசியதாக பா.ஜ., மா.கம்யூ., தொண்டர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

அருமனை அருகே புண்ணியம் பகுதியில் மா.கம்யூ., சார்பில் விளையாட்டுப்போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக கேரள மாநிலம் ஆலப்புழாவைச் சேர்ந்த மா.கம்யூ., ஆதரவு எழுத்தாளர் சீயான் குமார் பரிசு வழங்கி பேசினார்.

விரலை கடித்தவர் பற்கள் உடைப்பு: அ.தி.மு.க., -- தி.மு.க.,வினர் மோதல்

அப்போது ஹிந்து கடவுள் குறித்து



அவர் அவதூறு பேசியதாக கூறப்படுகிறது. நிகழ்ச்சி முடிந்து திரும்பிய எழுத்தாளரின் காரை பா.ஜ., ஆர்.எஸ்.எஸ்., தொண்டர்கள் வழிமறித்தனர்.

மா.கம்யூ., தொண்டர்களும் அங்கு திரண்டனர். இரு தரப்பினரும் பரஸ்பரம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போது கைகலப்பு ஏற்பட்டது. இதில் ராபின்சன் 30, என்பவர் காயமடைந்தார். தகவலறிந்து வந்த அருமனை போலீசார் இரு தரப்பினரையும் காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றனர். அங்கு மார்த்தாண்டம் டி.எஸ்.பி., நல்லசிவம் இரு தரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

விழாவில் பேசப்பட்ட ஆடியோ பரிசோதிக்கப்படும் என்றும், அதில் ஹிந்து கடவுள் பற்றி அவதூறு பேசியிருந்தால் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் டி.எஸ்.பி., உறுதி அளித்தார். இதையடுத்து இருதரப்பினரும் அங்கிருந்து திரும்பி சென்றனர். (ஐ)

## சீமை கருவேல மரங்களால் காடாக உருமாறிய காவிரி

காவிரி ஆற்றில் சீமை கருவேல மரங்கள் வளர்ந்து ஆக்கிரமித்துள்ளதால், நீரோட்டம் தடைபட்டுள்ளதுடன், நிலத்தடி நீர்மட்டம் குறையும் அபாயம் உள்ளது. அவற்றை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கர்நாடகாவில் உருவாகும் காவிரி ஆறு, தமிழகத்தில், தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, மயிலாடுதுறை மாவட்டங்கள் வழியாக பாய்ந்து, பூம்புகாரில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தற்போது, காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்ததால், ஆங்காங்கே சீமை கருவேல மரங்கள் வளர்ந்து, ஆற்றின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துள்ளன.

சீமை கருவேல மரம் ஆற்றில் உள்ள சொற்ப தண்ணீரையும் உறிஞ்சிக்கொள்வதுடன், ஆற்றின் நீரோட்டத்தையும் தடுத்து வருவதால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

காவிரி ஆற்றில் அதிகளவில் சீமை கருவேல மரங்கள் ஆக்கிரமித்துள்ளதால், தண்ணீர் கடைமடை வரை செல்ல முடியாத நிலை உள்ளது. இதனால், மக்களின் குடிநீர் தேவைக்கும், விளை நிலங்களின் பாசனத்துக்கும் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது. ஆற்றை ஆக்கிரமித்துள்ள சீமை கருவேல மரங்களை அகற்றாவிட்டால், நிலத்தடி நீர் முழுதும் உறிஞ்சி, வரும் காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். அதற்கு முன், சீமை கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். (ஐ)





## கட்சி பாகுபாடின்றி நிதி ஒதுக்கீடு: இ.பி.எஸ்.,க்கு முதல்வர் ஸ்டாலின் பதில்

ட்சி பாகுபாடின்றி அனைத்து தொகுதிகளின் நலத்திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என இ.பி.எஸ்., எழுப்பிய கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்தார்.

சட்டசபையில், அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., பேசுகையில், 'அ.தி.மு.க., உறுப்பினர்கள் கோரிக்கை வைக்கும் பெரும்பாலான திட்டங்கள் சாத்தியமில்லை என திருப்பி அனுப்பப்படுகிறது. எனது தொகுதி சார்பாக முன்வைக்கபட்ட 10 கோரிக்கைகளில் இரண்டை மட்டுமே ஏற்று கொண்டனர்' என குற்றம் சாட்டினார்.

இதற்கு முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்து பேசியதாவது: ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் தொகுதி சார்ந்து 10 கோரிக்கைகளை வழங்க வேண்டும் அதை நிறைவேற்றுவதே நோக்கம். கட்சி பாகுபாடின்றி அனைத்து தொகுதிகளின் நலத்திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. முதல்வர் திட்டத்தை நானே நேரடியாக 2 மாதத்துக்கு ஒருமுறை ஆய்வு செய்கிறேன். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# ஒளியாய் இரு!

சுய பராமரிப்பு என்ற உடன் அது மிகவும் செலவாகும்விஷயம்என்கிற எண்ணம்மேலெழுந்தால் அதை நன்றாக அழுத்தி துடைத்து விடுங்கள்.

சுய பராமரிப்பு என்பது நம் உடலை, மனதை, பழக்க வழக்கங்களை நன்றாக வைத்துக்கொள்வது அவ்வளவே. அதற்கு மேல் உங்களுக்கு ஆசையும் வசதியும் இருப்பின் அழகு நிலையம், அதிக விலையுள்ள ஆடைகள் என்று செலவு செய்யலாம். ஆனால், இதெல்லாம் உங்களின் விருப்பத்தின் பேரில் செய்வதே தவிர சுய பராமரிப்பில் சேராது.

**உடலைப் பராமரிப்பது :**

உடலைப் பராமரிப்பது என்ற உடன் ஷீரோ சைஸ் மெயிண்டைன் செய்வதல்ல. உடலைச் சுகாதாரமாக, ஆரோக்கியமாகப் பேணுவது. தேவையான, முடிந்த உடற்பயிற்சிகள் செய்வது, ஆரோக்கியமாக உண்பது, உடல் கொடுக்கும் ஆரோக்கிய சமிஞ்சைகளைப் புறக்கணிக்காமல் கவனிப்பது போன்ற சின்ன சின்ன விஷயங்கள்தாம். ஆனால், பெரும்பாலோர் முக்கியமாகப் பெண்கள் குடும்பத்தினருக்காக எவ்வளவு வேலை வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால், தனக்கென ஒரு மணி நேரம் ஒதுக்கி நடைப் பயிற்சியில் ஈடுபட நேரம் கிடைக்காது. தினமும் வீட்டில் மூன்று வேலையும் புதிதாகச் சமைத்தாலும், நேற்று மீதமான, காலையில் செய்து மிச்சமான உணவை வீணாக்கக் கூடாது என உண்பர். அவர்களை யாரும் பழையதைச் சாப்பிட வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில்லை. ஆனாலும் உணவை வீணாக்கக் கூடாது என்று உடம்பை வீணாக்கிக்கொள்வர்.

நேற்று வைத்த குழம்போ சட்னியோ வீணாகப் போனால் ஆகும் செலவைவிட நம் உடலைக் கெடுத்துக்கொண்டால் மருத்துவரிடம் செலவழிக்கும் தொகை மிக அதிகம். நம் உடலுக்குத் தேவையான சத்துகளைக் கொடுக்க வேண்டியது, நமது தலையாய கடமை. அதைக் கொடுக்கத் தவறும் போது, நாம் மிகவும் நேசிக்கும் குடும்பத்தினருக்கே நாம் பாரமாகிப் போகும் வாய்ப்பும் உண்டு. யோசியுங்கள் தோழிகளே.

குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் என்ன என்ன தேவை என்று பார்த்துப் பார்த்து வாங்குவர், தனக்கென வாங்கினால் இருப்பதிலேயே கம்மி விலையுள்ள சோப், ஷாம்புவைத் தேர்ந்தெடுப்பர். எனக்கெதுக்கு இப்போ இவ்வளவு விலை அதிகமா என்கிற சப்பை காரணம் சொல்லிக்கொண்டே. குடும்பத்தில் ஒருவருக்குச் சிறு ஆரோக்கியப் பிரச்சினை என்றாலும் உடனடியாகக் கவனிக்கும் பல பெண்கள், தனக்கு என்றால், ஏதோ ஒரு மாத்திரையை விழுங்கிவிட்டு வேலையைப் பார்க்கப் போய்விடுவர். தன்னை நேசிக்கும் ஒருவரால் இவ்வாறு தன்னை வஞ்சித்துக் கொள்ள முடியவே முடியாது. நாம் வாழும் வரை நம் உடன் வரப்போவது உடலும் மனமும்தான். அதை ஆரோக்கியமாகப் பாதுகாப்பது சுய நேசத்தினாலே சாத்தியம்.



**மனதை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது :**

உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதாவது சற்று வெளிப்படையாகத் தெரியும். உடல் ஆரோக்கியமாக இல்லை என்பதை உடலில் வரும் சில அறிகுறிகள் காட்டிக்கொடுக்கும். ஆனால் மனம்?

வெளிப் பார்வைக்கு ஒன்றும் தெரியாது, அனைத்தும் நலம் போலத்தான் இருக்கும். மற்றவருக்கு மட்டுமல்ல நமக்கே புரியாது மனதின் ஆரோக்கியம். அதனால் மிகுந்த கவனம் தேவை. தினமும் சிறிது நேர மூச்சுப் பயிற்சி மனதை அமைதியாக வைத்துக் கொள்ள உதவும். தினமும் நாட்குறிப்பு எழுதுவதும், அன்றைய விஷயங்களை நாம் அசைபோட்டுப் பார்க்கவும், அதனால் நமக்கு ஏற்பட்ட கோபம், பொறாமை போன்ற உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும் உதவும். ஒவ்வொரு நாளின் முடிவிலும் நம்மை நாமே சீர் தூக்கிப் பார்த்துக்கொள்ளவும், தவறான எண்ணங்களைக் களையவும் உதவும். நடந்ததை மாற்ற முடியாதுதான், ஆனால் இனியொருமுறை அவ்வாறு நடக்காமல் பார்த்துக்கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் நாம் மனதளவில் முதிர்ந்து வருகிறோம் என்பதே மிகுந்த உவப்பைத் தரும் விஷயம்தான். நம் உணவு என்பது உடலுக்கானது மட்டுமல்ல, மனதிற்கானதும்தான். நல் உணவு தொடர்ந்து உண்ணும் போது மனதும் அமைதியாக இருக்கும் என்பதில் சந்தேகமே வேண்டாம். வீணாகப் புறம் பேசுதல், அடுத்தவரின் நிலையை ஆராயாமல் அவர்களைப் பற்றிய முடிவுக்கு வருதல் இது போன்ற செயல்களும் நம்மை அறியாமலேயே நம் மனதிற்குச் செய்யும் தீங்கு. எண்ணம், பேச்சு, செயல் அனைத்திலும் நல்லவை மட்டும் இருந்தால் மனநலம் நிச்சயம் நம் வசமாகும்.



# அமைதிக்கான நோபல் பரிசுக்கு இம்ரான் கான் பெயர் பரிந்துரை!



அமைதிக்கான நோபல் பரிசுக்கு பாக். மாஜி பிரதமர் இம்ரான் கான் பெயர் பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது.

பாகிஸ்தானில் தெஹ்ரிக் இ இன்சாப் என்ற கட்சியின் நிறுவனராக உள்ளவர் இம்ரான் கான். பிரதமராக பதவி வகித்த போது ஊழல் புகாரில் சிக்கினார்.

அதன் எதிரொலியாக, ஊழல், அதிகார துஷ்பிரயோகம் குற்றச்சாட்டுகளுக்காக 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தற்போது வரை சிறையில் உள்ளார். இதே வழக்கில் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை அளிக்கப்பட்டு உள்ளது.

இந் நிலையில், உலக அமைதிக்கான நோபல் பரிசுக்கு இம்ரான் கான் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் உலக கூட்டணி எனும் அமைப்பு இதற்கான பரிந்துரையை அளித்துள்ளது.

இந்த கூட்டணியானது, நார்வே அரசியல் கட்சியான பார்ட்டியெட் சென்ட்ரம் உடன் இணைந்து செயல்படுகிறது. இம்ரான் கான் பெயரை பரிந்துரைத்துள்ளதை பார்ட்டியெட் சென்ட்ரம் கட்சி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமது எக்ஸ்தள பதிவில் கூறி உள்ளதாவது பாகிஸ்தானில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்திற்காக ஆற்றிய பணிகளுக்காக இம்ரான் கான் பெயரை அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கிறோம். நோபலுக்கு பரிந்துரைக்கும் உரிமை கொண்ட ஒருவருடன் கூட்டணி வைத்து பரிந்துரைத்துள்ளோம் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு அந்த பதிவில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

2019ம் ஆண்டில் தெற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக நோபல் பரிசுக்கு இம்ரான்கான் பரிந்துரைக்கப்பட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# நாங்கள் மீண்டும் பறப்போம்: சுனிதா வில்லியம்ஸ் உறுதி

மீண்டும் ஸ்டார்லைனர் விண்கலத்தில் பறப்பீர்களா என்று கேட்டபோது, நாங்கள் மீண்டும் பறப்போம் என சுனிதா வில்லியம்ஸ் உறுதி அளித்தார்.

கடந்தாண்டு ஜூன் மாதம், 5ம் தேதி, இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்துக்கு பயணமானார். அவருடன் விண்வெளி வீரர் புட்ச் வில்மோரும் சென்றார். எட்டு நாட்களுக்கான பயணம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக 9 மாதங்களாக நீடித்தது. சமீபத்தில் இருவரும் பத்திரமாக பூமி திரும்பினர்.

இந்நிலையில், விண்வெளி மையத்தில் இருந்து திரும்பிய பிறகு, நாசா விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் முதல் முறையாக ஊடகங்களுக்கு உரையாற்றினர். மீண்டும் ஸ்டார்லைனர் விண்கலத்தில் பறப்பீர்களா என்று கேட்டபோது, இரு விண்வெளி வீரர்களும் மீண்டும் பறப்போம் என தெரிவித்தனர்.

அப்போது சுனிதா வில்லியம்ஸ் கூறியதாவது: ஸ்டார்லைனர் மிகவும் திறமையான விண்கலம். சில விஷயங்களை சரி செய்ய வேண்டும். இது நிறைய திறன்களைக் கொண்டுள்ளது. பயிற்சி எங்களைப் புறப்படத் தயார்படுத்தியது. புதிய சவால்களுக்குத் தயாராக எங்களுக்கு உதவியது. என்னை நானே பாராட்டிக் கொள்கிறேன். ஆனால் மீண்டும் அங்கு செல்ல எங்களைத் தயார்படுத்தியதற்காக எங்கள் பயிற்சியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் நாங்கள் தரையிறங்கிய தருணத்திலிருந்து, எங்கள் ஆதரவுக் குழு எங்களுடன் இருந்து, எங்கள் வலிமையை மீண்டும் பெற உதவுகிறது. எங்களை வழிநடத்துகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே, 'நாங்கள் மீண்டும் ஸ்டார்லைனரைப் பயன்படுத்துவோம். போயிங் மற்றும் நாசா உறுதிபூண்டுள்ளதால், அதை சரிசெய்து, அதைச் செயல்பட வைப்போம்" என்று வில்மோர் தெரிவித்தார். (ஐ)



# மோசமான நடத்தை: பால் மர்ச்சண்ட் ராஜினாமா

பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டதாக எழுந்த புகாரை அடுத்து, பிரைமார்க் தலைமை நிர்வாகி பால் மர்ச்சண்ட் ராஜினாமா செய்துள்ளதாக அசோசியேட்டட் பிரிட்டிஷ் புட்ஸ் (ஏ.பி. எப்) நிறுவனம் தெரிவித்துள்ளது.

வேளாண் உணவு நிறுவனமான ஏ.பி. எப்., அயர்லாந்தை தலைமையிடமாகக் கொண்டது. 17 நாடுகளில் இயங்குகிறது. 80,000க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ளது.

இந் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பால் மர்ச்சண்ட், பிரைமார்க் நிறுவனத்தின் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் தலைமை நிர்வாகியாக 16 ஆண்டு பணிபுரிந்தார். அவர் மீது பெண்ணிடம் பொருத்தமற்ற நடத்தை இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. அதனை தொடர்ந்து, இந்த விவகாரத்தில் உள்விசாரணை நடத்தப்பட்டது. மேலும் பிரைமார்க் செயல்திறன் சரிவு மற்றும் ஆசியா, ஐரோப்பா மார்க்கெட்டுகளில் விற்பனை குறைவு போன்ற சவால்களை எதிர்கொண்டிருந்தது. இந்நிலையில் அவர் ராஜினாமா செய்துள்ளார். ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவரது பதவில விலகல் உடனடியாக நடைபெறும்.

மார்ச்சண்ட் விசாரணைக்கு ஒத்துழைத்தார், தவறை ஒப்புக்கொண்டார் மற்றும் அவரது நடவடிக்கைகள், நிறுவனம் எதிர்பார்த்த தரத்திற்குக் கீழே இருந்தது. சம்பந்தப்பட்ட பெண்ணிடம் அவர் மன்னிப்பு கேட்டுள்ளார். இருந்த போதிலும் அவரது ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிரைமார்க் தற்காலிக தலைமை நிர்வாக அதிகாரியை நியமிக்கும் வரை, நிறுவனத்தின் பிற மூத்த நிர்வாகிகள் பொறுப்பை கவனிப்பார்கள்

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# நிதி முறைகேடு குற்றம் உறுதி பிரான்ஸ் வலதுசாரி கட்சி பெண் தலைவருக்கு தடை



நிதி முறைகேடு குற்றச்சாட்டில் சிக்கியுள்ள பிரான்ஸ் வலதுசாரி கட்சித் தலைவர் மரியன் லீ பென், தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் எதிர்க்கட்சியாக இருப்பது, நேஷனல் ராலி (சுூ) கட்சியாகும். வலதுசாரிக் கொள்கைகளை பின்பற்றும் இந்த கட்சி, தற்போதைய ஆட்சியாளர்களுக்கு நேர் எதிரான கொள்கைகளை பின்பற்றக் கூடியது.

இந்தக் கட்சியின் தலைவராக இருப்பவர் மரியன் லீ பென். இவரது தந்தையால் தொடங்கப்பட்ட இந்த கட்சியை பெண்மணியான மரியன் வழிநடத்தி வருகிறார். தற்போது இந்த கட்சி பிரான்ஸ் நாட்டில் முக்கிய எதிர்க்கட்சியாக உள்ளது. இந்நிலையில், மரியன், ஐரோப்பிய நிதியை முறைகேடாக கட்சிக்கு பயன்படுத்தினார் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

அது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி, மரியன் லீ பென் குற்றவாளி என அறிவித்தார்.

அவருக்கு மூன்று லட்சம் யூரோ மற்றும் சிறை தண்டனை விதிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதுமட்டுமின்றி, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அவர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேல் முறையீடு செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல், நேரடியாக இந்த தடை அமலுக்கு வரும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன் மூலம் வரும் 2027ம் ஆண்டு பிரான்ஸ் தேர்தலில் மரியன் போட்டியிட வாய்ப்பு இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது. (ஐ)

## புதுமுக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான பீடப் புதுமுக மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக உட்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர்

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "எமது பீடத்தைச் சேர்ந்த புதுமுக மாணவன் ஒருவர் சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டமை தொடர்பில் நாம் மிகுந்த வருத்தமடைகின்றோம். சம்பவம் தொடர்பாக அறிந்தவுடன் பல்கலைக்கழக சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருடன் நானும் வைத்தியசாலைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மாணவனை நேரில் பார்வையிட்டதுடன், வைத்திய நிபுணர்களிடமும் கலந்துரையாடினோம்.

பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோரிடமிருந்தும், மாணவனிடமிருந்தும் பெறப்பட்ட முதற்கட்டத்தகவலின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச்சந்தேகிக்கப்படும் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாகச் செயற்படும் வகையில் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கமைய மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பகிடிவதை மற்றும் மாணவர் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை, பல்கலைக்கழக உபவிதிகளுக்கு அமைய, கிடைக்கப்பெறும் விசாரணைக்குழுவின் பரிந்துரைகள் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் ஊடாகப் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். பேரவைத் தீர்மானத்துக்கமைய குற்றமிழைத்த மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், சம்பவம் பல்கலைக்கழகத்துக்கு வெளியே இடம்பெற்றிருப்பதனால் பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை வழங்கிய முறைப்பாடுகளுக்கமைய பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்குப் பல்கலைக்கழகம் பூரண ஒத்துழைப்பை வழங்கும்" என்றார். (ஐ)

## பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த அறிக்கையில், "யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானப் பீட புதுமுக மாணவன் மீதான பகிடிவதை" எனும் தலைப்பில் 2025 மார்ச் 31 ஆம் திகதி மற்றும் 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயமானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையில் அடிப்படையில் கவனம் செலுத்தியுள்ளது.

1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம், பகிடிவதை செய்வதானது இலங்கையின் மிகக் கடுமையான குற்றங்களில் ஒன்றாகவும் பிணை வழங்கப்படாத குற்றமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் பகிடிவதை செய்யும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் கைது பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படலாம் எனவும் ஏற்பாடுகளை கொண்டுள்ளது

எனவே யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மேற்குறித்த பகிடிவதை சம்பவம் தொடர்பில் உடனடி சட்ட நடவடிக்கை எடுத்து அது தொடர்பிலான அறிக்கையினை எதிர்வரும் 04.04.2025 இற்கு முன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய போலீஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெலிக்கடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்ள வேண்டும்." - என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு ஊடகங்களுக்குக் கருத்துக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பட்டலந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது இவ்வளவு காலமும் தூசு தட்டாமல் இருந்து ஜே.வி.பி. அரசு ஆட்சிக்கு வந்த பின் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

உண்மையில் அதனை நாம் வரவேற்கின்றோம். அதேநேரம் 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் கலவரம் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின்னர் இயக்கங்களுக்குத் தமிழ் இளைஞர்கள் சாரை சாரையாகச் சென்றனர்.

ஆகவே, ஒரு கேள்வியை இந்த அரசிடம் கேட்ட விரும்புகின்றேன். இதை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்ததைப் போன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் வெலிக்கடைச் சிறையில் காடையர்கள் வெளியில் இருந்து உள்ளே அழைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். உயிரிழந்தவர்களின் உடல்கள் எங்கே புதைக்கப்பட்டது என்பது கூடத் தெரியாமல் இருக்கின்றது. ஆகவே, இந்த அரசு நியாயமாகச் செயற்படுமாக இருந்தால் வெலிக்கடைப் படுகொலையையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

பட்டலந்த பிரச்சினை எல்லாவற்றையும் விட 1983 ஆம் ஆண்டு கலவரம் கூடுதலான இழப்புக்களைச் சந்தித்தது. இது வரலாற்றில் முதன்மையான இடத்தில் உள்ள படுகொலை. இதை அரசு விசாரணைக்குக் கொண்டு வந்து, அதற்கான நீதி, நியாயத்தை வெளிப்படுத்த வேண்டும் என மக்கள் சார்பாகவும், வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட போராளிகள் சார்பாகவும் கோரிக்கையை முன்வைக்கின்றேன்." - என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஷநிலையில் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை புளியங்குளம் குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதாக அயலவர்கள் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலத்துக்கு அருகேயுள்ள வயல் வெளியில் சேட் ஒன்றும் காணப்படுவதுடன், குறித்த சடலம் ஐந்து தொடக்கம் பத்து நாட்களுக்கு மேற்பட்டதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது.

தடயியல் பொலிஸாரின் உதவியுடன் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பதில் நீதிவான் த.ஆர்த்தியும் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

## நீர்த்தேக்கத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வயதுடைய யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மூன்று நாட்களுக்கு முன்னர் காணாமல்போயிருந்த யுவதியின் சடலமாக இது இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யோஷிதவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பு, யூனியன் பிளேசில் உள்ள இரவு நேர களியாட்ட விடுதிக்குக் கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி இரவு யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவியுடன் குழுவொன்று சென்றுள்ளது.

இதன்போது, இரவு நேர களியாட்ட விடுதிக்கு வெளியில் யோஷித ராஜபக்ஷவுடன் சென்ற குழுவுக்கும் களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

மோதலின் போது யோஷித ராஜபக்ஷவுடன் சென்ற குழுவினர் களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி ஆகியோர் கொம்பனி வீதி பொலிஸாரிடம் 3 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

இந்த மோதலுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் மத்திய கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி சரணடைந்ததையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை!

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவையை இயக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

அதன்படி, பண்டிகைக் காலத்தில் பொதுமக்களின் வசதிக்காக 500க்கும் அதிகமான பேருந்துகளை இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.

இந்த திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டம் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை செயல்படுத்தப்படும்.

இரண்டாம் கட்டம் ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை விசேட பேருந்து சேவை இயக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

# இன்று முதல் பால் தேநீரின் விலை அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.01

இன்று முதல் பால் தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிப்பால், பால் தேநீரின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்கும் என அந்த சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்திருந்தார்.

அதன்படி, இன்று முதல் அமுலாகும் வகையில், பால் தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழரசுக் கட்சி வேட்பாளர் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு



கொழும்பு,ஏப்.01

மட்டக்களப்பு - வெல்லாவெளி திக்கோடை பகுதியில் இலங்கை தமிழரசுக்கட்சியின் வேட்பாளரின் வீட்டின் மீது நேற்றிரவு (31) இரவு பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போரதீவுப்பற்று பிரதேச சபைக்காக போட்டியிடும் அருள்ராஜா பிரேமாகரன் என்பவரின் வீட்டின் மீதே இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் திங்கட்கிழமை (31) இரவு மரண வீடு ஒன்றுக்கு சென்றிருந்த நிலையில் வீட்டின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாக கூறியுள்ளார். அந்தநேரத்தில் வீட்டில் மனைவி, பிள்ளைகள் உறங்கிக்கொண்டிருந்ததாகவும் பிரேமாகரன் தெரிவித்தார்.

தாக்குதல் காரணமாக வீட்டிலிருந்த யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லையென வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டின் கூரையின் மீது இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ள நிலையில் வீட்டின் உட்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சீற் எரிந்துள்ளதாகவும் வேறு சேதங்கள் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2025இல் வெளியிடப்பெற்றது.